DEPOSITION OF WITNESS

IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

**MCOP.No.360/2021**

| | | |
|---|---|---|
| Name | : | இசக்கிமுத்து **Pw1** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 23rd day of November 2022.

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த மனுவில் 2ம் மனுதாரர் ஆவேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தை இன்று தாக்கல் செய்கிறேன். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் அதை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டுள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் உண்மை. 16.12.2020ல் தென்காசி காவல் நிலையத்தார் குற்ற எண்.490/2020 என்ற எண்ணில் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையின் ஒளிப்பட நகல் ம.சா.ஆ.1 ஆகும். மேற்படி விபத்தில் இறந்துபோன சுப்பிரமணியன் இறப்புசான்றின் ஒளிப்பட நகல் ம.சா.ஆ.2 ஆகும். மேற்படி இறந்துபோன சுப்பிரமணியன் ஓட்டுநர் உரிமத்தின் ஒளிப்பட நகல் ம.சா.ஆ.3 ஆகும். மேற்படி விபத்தில் இறந்துபோன சுப்பிரமணியனுக்கு பாத்தியப்பட்ட டிஎன் 76 கே 9092 என்ற பதிவெண் கொண்ட மோட்டார் சைக்கிளின் பதிவெண் புத்தக ஒளிப்பட நகல் ம.சா.ஆ.4 ஆகும். மேற்படி விபத்தில் இறந்துபோன சுப்பிரமணியன் வாரிசுகளை காட்டக்கூடிய வாரிசு சான்றிதழின் ஒளிப்பட நகல் ம.சா.ஆ.5 ஆகும். டிஎன் 72 பிஜே

8347 பல்சர் மோட்டார் சைக்கிளின் காப்பீடு சான்றின் ஒளிப்பட நகல் ம.சா.ஆ.6 ஆகும். மனுப்படி உத்தரவிட வேண்டுகிறேன்.

**3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

இந்த விபத்தில் ஈடுபட்ட 2ம் எதிர்மனுதாரரின் வாகனம் 3ம் எதிர்மனுதாரரிடத்தில் காப்பீடு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. 16.12.2020ல் விபத்து நடந்திருக்கிறது என்றால் சரிதான். 2ம் எதிர்மனுதாரரின் வாகனம் 16.12.2020க்கு முன்பாக 26.09.2019 முதல் 25.09.2020வரை காப்பீடு உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. விபத்து நடந்த தேதியில் இந்த வாகனத்திற்கு காப்பீடு இல்லை என்றால் சரியல்ல. குறுந்தலைப்பிலும் நெடுந்தலைப்பிலும் காப்பீடு எடுக்கப்பட்ட கால வரையறை குறிப்பிடவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. விபத்துக் காலத்தில் 3ம் எதிர்மனுதாரரிடத்தில் காப்பீடு ஏதும் இல்லாததால் இந்த எதிர்மனுதாரர் எங்களுக்கு நஷ்ட ஈடு வழங்கவேண்டியதில்லை என்றால் சரியல்ல. இந்த விபத்தில் இறந்தவர் என் அப்பா. என்னுடைய அப்பாவின் வயது, வேலை, வருமானம் ஆகியவற்றைக் காண்பிக்கும் ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கூலி வேலை செய்கிறேன். 3ம் மனுதாரர் கடையில் வேலை பார்க்கிறார். 1ம் மனுதாரரான என்னுடைய தாயாரைத் தவிர மற்ற மனுதாரர்கள் என்னுடைய அப்பாவின் வருமானத்தைச் சார்ந்து இருக்கவில்லை என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் எனது அப்பா ஓட்டிச் சென்ற வாகனம் என்னுடைய அப்பாவுடையதாகும். என்னுடைய அப்பாவின் இருசக்கர வாகனத்தின் காப்பீடு கழகத்தை அவசியத் தரப்பினராக இந்த மனுவில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். இந்த விபத்தில் சம்பந்தப்பட்ட குற்ற வழக்கின் மாதிரி வரைபடம், பார்வை மகஜர், 2 வாகனங்களுக்கான மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வறிக்கை, குற்றப்பத்திரிக்கை போன்றவற்றை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த ஆவணங்கள் எங்களுடைய வழக்கிற்கு விரோதமாக இருக்கும் என்பதால் தான் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. என்னுடைய அப்பா தான் அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும் வாகனத்தை ஓட்டிச் சென்று விபத்து நடந்து அதனால் மரணத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. அதனால் தான் காவல் துறையினர்இந்த விபத்திற்கு என்னுடைய அப்பா தான் காரணம் என்பதால்

மேல்நடவடிக்கையை நிறுத்தி இறுதி அறிக்கையை சமர்ப்பித்திருக்கிறார்கள் என்றால் சரியல்ல. விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் காரணம் இல்லை என்பதாலும் விபத்து காலத்தில் 3ம் எதிர்மனுதாரரிடத்தில் காப்பீடு இல்லை என்ற காரணத்தினாலும் இந்த எதிர்மனுதாரருக்கு எதிராக இந்த மனுவைத் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.